MCOP. 29/2024 PW1 .

திரு. லோகேஷ் த/பெ.அன்னைய்யா

நாள்:12.03.2026.

**சாட்சிக்கு தமிழ் தெரியாது என்றும் தெலுங்கு மட்டுமே தெரியும் என்பதால் இந்நீதிமன்றத்தில் வழக்கறிஞராக பணிபுரியும் வழக்கறிஞர் திரு.R.கணேசன்,B.A.,LLB., KAR.No.1823/2023 அவர்கள் சாட்சிக்கு தெலுங்கில் சொல்ல சாட்சி திரும்ப தெலுங்கில் சொல்லும் பதிலை அவர் தமிழில் மொழியாக்கம் செய்து இந்நீதிமன்றத்தில் தெரிவிக்கிறார். இருதரப்பு வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சி விசாரணை நடைபெறுகிறது. இருதரப்பு வழக்கறிஞர்களும் திரு.R.கணேசன்,B.A.,LLB., KAR.No.1823/2023 அவர்கள் மொழிப்பெயற்பதற்கு ஆட்சேபனை இல்லை என்பது தெரிவிக்கப்பட பிறகு குறுக்கு விசாரணை நடைபெறுகிறது.**

குறுக்கு விசாரணை 2வது எதிர்மனுதாரர் தரப்பில் :

முதல் முறையாக விசாரணை செய்யும் போது 01.02.2023 முதல் 07.03.2023 மற்றும் 09.06.2024 முதல் 14.06.2024, ஸ்ரீநிவாச மருத்துவமனையில் வழங்கப்பட்ட விடுவிப்பு சான்று மட்டும் தான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். எத்தனை முறை ஸ்ரீநிவாச மருத்துவமனையில்சிகிச்சை எடுத்தேன் என்றால் 3 முறை சிகிச்சை எடுத்தேன். தற்போது 01.12.2023 முதல் 07.12.2023 வரை உள்நோயாளியாக சிகிச்சை பெற்றதற்கு ம.த.சா.ஆ.14 தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். ஏற்கனவே எனக்கு வலது காலில் அறுவைசிகிச்சை செய்து வைக்கப்பட்ட பிளேட் உடைந்து விட்டதால் மீண்டும் அறுவைசிகிச்சை செய்து புதிய பிளேட் வைத்துள்ளார்கள் என்றால் சரிதான். தற்போது வரை காலில் பொறுத்தப்பட்டுள்ள பிளேட் அகற்றப்படவில்லை. ம.த.சாஆ.15 வழங்கிய மருத்துவமனை நிர்வாகத்தினை அழைத்து நிருப்பித்தால் தான் மருத்துவபில்கள் கிடைக்க

தக்கது என்றால் சரியல்ல. மனுவிற்காக மத.சாஆ.15 ஜோடித்து தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாணை இல்லை.**

**வழக்கறிஞர் திரு.R.கணேசன்,B.A.,LLB., KAR.No.1823/2023 அவர்கள் மொழிபெயர்த்து சொன்னதில் இருதரப்பு வழக்கறிஞர்களும் ஆட்சேபனை இல்லை என்று நீதிமன்றத்தில் தெரிவித்தார்கள்.**

ஓம்./- எஸ்.விஜய் அழகிரி,. பி.காம்.,பி.எல்.,
சார்பு நீதிபதி,
தேன்கனிக்கோட்டை.